RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1868

# ‘செல்லாத பணத்தில்’ உளவியல் சிக்கல்கள்

**கோ. சந்தனமாரியம்மாள்** [அ, *]

[அ] தமிழ் உயராய்வுத்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி 628503, தமிழ்நாடு, இந்தியா.

# Psychological issues in Selladha Panam novel

**G. Santhanamariammal** [a, *]

[a] Department of Tamil, Government Arts and Science college, Kovilpatti-628503, Tamil Nadu, India

* Corresponding Author: gsminiyan@gmail.com

Received: 13-07-2022
Revised: 30-10-2022
Accepted: 13-11-2022
Published: 08-12-2022

**ABSTRACT**

‘Selladha Panam’ is a tamil novel that won the shahitya academy award for the year 2020. When “the Life partner” chosen by a women herself becomes a mistake, her life becomes a miserable one. When people who tie the wedding knot based on Love ends in a failure, it is considered that Love itself has failed by the Society. When Infatuation is believed as Love and the Partners who commit and engage their life in wedding knot based on these basic instincts sufferings and misunderstandings arose. Family life will not be a blissful one when there is no forgiveness and sharing of Love. Suspecting a women and making her subjunctive will lead only towards further problems. Freedom and free will is necessary for women, just like it is for men in Family Life. Inspite of Rectifying one’s mistake and leading an irresponsible life on the side of a Man will only makes the life of a women further miserable. This is Portrayed in the novel, where the mindset of a lady who suffers from all the above calamous. In a life full of Doubt and trouble, death seems to her as a door of escape. The title of the novel signifies this theme that “after a period of time and consequences in life, Money will be of no value Selladha Panam”.

**Keywords:** Selladha Panam, Shahitya Academy Award, Psychological issues, Society

## முன்னுரை

எதிர்பாராத திருப்பங்களும் விறுவிறுப்பும் கொண்டதாக கதை நிகழ்வுகள் அமைய வேண்டும் என்பதையெல்லாம் கடந்து உண்மைச் சம்பவத்தின் விவரணையாக இன்றைக்குப் புதினக் கதை மாற்றம் கண்டிருக்கிறது. நடப்பு நிகழ்வுகளை கதைக் களமாகக் கொண்டு படைக்கும் எழுத்தாளர்களில் ‘இமயம்’ குறிப்பிடத்தகுந்தவர் ஆவார். 2020 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதெமி விருது இவருடைய ‘செல்லாத பணம்’ புதினத்திற்கு வழங்கப்பட்டது. பருவத்தில் சில பெண்கள் தவறு செய்து விடுகிறார்கள். பெண் மட்டுமல்ல ஆண்களிடமும் இத்தவறு ஏற்பட்டு விடுகிறது. பருவக் கோளாறில் இனக்கவர்ச்சியை மட்டுமே வைத்துக் கொண்டு திருமண பந்தத்திற்குள் நுழையும் காதலர்களின் மனநிலையையும் விபரீத முடிவுகளையம் சித்திரிப்பதாக புதினம் அமைகிறது.

காதலித்துத் திருமணம் செய்து கொண்ட ரேவதி ஆறு ஆண்டுகள் தீக்குளித்து விடுகிறாள். 24ம் தேதி மாலை தீக்குளிக்கிறாள். 28ந் தேதி காலை அவள் இறந்து விடுகிறாள். இடைப்பட்ட நான்கு நாட்கள் அவள் ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோது அவளின் குடும்பத்தார்க்கு ஏற்பட்ட மனப்போராட்டங்களை நிகழ்ச்சிக் கோர்வைகளாக்கி ‘செல்லாத பணத்தை’செதுக்கியிருக்கிறார்

எழுத்தாளர் இமயம். இந்த நான்கு நாட்களுக்குள் ரேவதியின் ஆறு ஆண்டு கால மண வாழ்க்கை பாத்திரங்களின் எண்ண ஓட்டத்தில் வந்து போகிறது.

## இனக்கவர்ச்சியும் காதலும்

அன்பைப் பரிமாறிக் கொள்ளும் ஆணும் பெண்ணும் காதலிக்கும் போது தங்களின் சுயத்தை முழுமையாக வெளிக்காட்டுவதில்லை. எதிர்பாலின ஈர்ப்பும், சுயத்தைத் தெரிந்து கொள்ள முயற்சிக்காததோ அல்லது வெளிப்படுத்தாததோ தோல்விக்குக் காரணமாகின்றன. காதல் கொண்ட இருவர் திருமண பந்தத்திற்குள் நுழைந்த பிறகே ஒருவரையொருவர் தெரிந்து கொள்கிறார்கள்.

அமராவதி, நடேசன் தம்பதியின் மகள் ரேவதி. பொறியியல் பட்டம் பெற்ற அறிவும் அழகும் நிறைந்த பெண். நடேசன் அரசுப் பள்ளியில் தலைமையாசிரியர். மகனும் பொறியியல் படிப்பை முடித்து தனியார் நிறுவனத்தில் பணியாற்றுகிறான். ஆட்டோ ஓட்டுபவன் ரவி. ரேவதியும் ரவியும் காதலிக்கின்றனர். ரவியைக் கரம் பிடிக்க வீட்டுக்குள்ளேயே அகிம்சைப் போராட்டம் நடத்துகிறாள் ரேவதி. பெற்றோரும் தோழியும் அறிவுரைகள் வழங்கி திருத்த முயன்று தோற்றுப் போகிறார்கள். ஒரு நாளைக்கு முப்பது நாற்பது முறை ரேவதியின் வீட்டு வாசல் வழியே போவதும் வருவதுமாக இருக்கிறான் ரவி. கோயிலில் ஏழெட்டு முறை ரேவதியைப் பார்த்திருக்கிறான். 'நீ இல்லன்னா நான் செத்திடுவேன்' என்று அவன் சொன்னதை அவளால் எளிதில் எடுத்துக் கொள்ள முடியவில்லை, 'ஒரு மாசம்தான் பாத்திருப்ப. அதுக்குள்ளார எம்மாம் பேசி பழகியிருப்ப? ஒரு மாசத்திலேயே அவனுக்காக நீ சாவப்போற?' என்று தாய் கேட்டதற்கு ரேவதியால் பதில் சொல்ல முடியவில்லை. பிடித்ததற்குக் காரணம் சொல்லத் தெரியவில்லை. வசதியில்லை, படிப்பு இல்லை, இருந்தாலும் ரவியை அவளால் மறக்க முடியவில்லை (Imayam, 2018). தனக்காக அவனையே வருத்திக் கொள்வதைக் கண்டு இரங்கினாள். இரண்டு மூன்று முறை செத்துப் போக முயற்சி செய்த காரணத்தினால் வேண்டா வெறுப்பாக பெற்றோர் ரவிக்குத் திருமணம் செய்து வைக்கின்றனர்.

"ஒரு டாக்டரு, இன்சினியரு, இல்ல ஒரு வாத்தியாருக்காவது படிச்சிருக்கானா? தகரக் கொட்ட மாதிரி ஒரு வீடு. சொந்தபந்தம்னு யாருமில்ல. சொத்துன்னு ஒரு எட்டணா இல்ல. ஆட்டோகூட சொந்தமா இல்ல. சேட்டுகிட்ட டியூவில வாங்கியிருக்கான். அவன்தான் ஒனக்கு ஏத்தவன்ங்கிறதுக்கு ஒரு காரணத்த மட்டும் எனக்குச் சொல்லு. அவனுக்கே ஒன்னெக் கட்டி வச்சிடுறன்" என்கிறாள் ரேவதியின் தாய் (Imayam, 2018). தன் பெண்ணுக்கு எந்த வகையிலும் ஒத்து வராத ஒருவனுக்குப் பெண்ணைக் கொடுக்க மனம் வரவில்லை.

பிடித்ததற்கான காரணத்தைத் தாய் கேட்டதும் 'சொல்லத் தெரியல' என்று முணுமுணுக்கிறாள். தனக்கு ரவியைப் பிடித்ததற்கான காரணம் என்ன என்று அவளுக்குள் யோசித்துப் பார்க்கிறாள். "கோயிலில் ஏழெட்டு முறைக்கு மேல் பார்த்திருக்கிறாள். தன்னுடைய பெயரை இரண்டு கைகளிலும், நெஞ்சிலும் பச்சை குத்தியிருக்கிறான். இவள் எப்போது வருவாள் என்று கோயிலிலேயே உட்கார்ந்திருக்கிறான். ஒரு நாளைக்கு குறைந்தது முப்பது நாற்பது முறைக்கு மேல் வீட்டு வாசல் வழியே போகிறான். வருகிறான். ஸ்டைலாக கிராப்பும், கிருதாவும், மீசையும் வைத்திருக்கிறான். ஆள் வாட்டசாட்டமாக இருக்கிறான். நல்ல நிறமாக இருக்கிறான். வடிவான முகம். பார்க்கும் போதெல்லாம் நீ இல்லன்னா நான் செத்திடுவேன் என்று சொல்லுவான். இவ்வளவுதான். இதில் எது தனக்குப் பிடித்திருக்கிறது?" சிந்தித்த ரேவதிக்குப் பதில் கிடைக்கவில்லை (Imayam, 2018).

"வளர் இளம் பருவத்தினரான ஆண், பெண் இடையே தோன்றும் இனக்கவர்ச்சி கூட பல சமயங்களில் தீவிரமான அன்பாகப் புரிந்து கொள்ளப்படுவதுண்டு. இவர்களிடையே ஏற்படக்கூடிய அன்பு பரிமாற்றம் உடலியல், பாலியல் ரீதியாக மாறி உடலுறவு கொள்ளுதல் என்னும் நிலையாக உருப்பெருமேயானால் அந்த அன்புறவு திருமணம் எனும் உறவாக முழுமை பெறாமல் முறிந்து விடும் போது அது பெருமளவில் பெண்களைத்தான் பாதிக்கும்." திருமணம் முடிந்தாலும் இல்லறம் இனிக்காது. மன அழுத்தம் ஏற்பட்டு விவாகரத்தோ அல்லது தற்கொலையோ செய்து கொள்ள நேரிடலாம்.

காதல் என்பது உணர்ச்சிகளால் பின்னப்பட்டது. எல்லோருக்கும் ஒரே மாதிரியான பார்வை உண்டு என்று சொல்ல முடியாது. ஒவ்வொருவரின் பார்வையும் வெவ்வேறானது. காதல் என்று சொல்வதும்கூட ஒரு நிலையில் இனக்கவர்ச்சியாக மட்டும் இருப்பதற்கு வாய்ப்புண்டு. இங்கே ரேவதி, ரவியின் காதலும் அப்படித்தான்.

காதலுக்கும் இனக்கவர்ச்சிக்கும் வேறுபாடு உண்டு. உடல்ரீதியான ஒரு ஈர்ப்பு இனக்கவர்ச்சியாகும். உடலில் கிளர்ச்சியை ஏற்படுத்தும். குறுகிய காலத்தில் இந்த எண்ணம் விலகிவிட வாய்ப்புள்ளது. இந்த ஈர்ப்பு காதலுக்கு அடிப்படை என்றாலும் அது பல படிநிலைகளைக் கடந்து காதலாக மாற்றம் பெறுகிறது. அன்பு செலுத்தும் ஆற்றலைக் காதல் வளர்த்தெடுக்கிறது. காதலர் இருவரும் சரியாக நடந்து கொள்ளும் நிலையில் காதல் மகிழ்ச்சிகரமாகவும் அவர்கள் நடவடிக்கையில் பிறழ்வோ, புறக்கணிப்போ ஏற்படும்போது காதலில் விரிசலும் பிரச்சனைகளும் வருகின்றன.

காதலியின் தேவையை அறிந்து காதலனும் காதலனின் தேவையறிந்து காதலியும் செயல்படும் நிலையில் காதல் வலுப்பெறுகிறது. ஒருவருக்கொருவர் உள்ளுணர்வுகளைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும் காதலுக்குப் பிறகு இருவரும் இணைந்து வாழும் சூழலில் நிறைகுறைகளை அறிந்து விட்டுக் கொடுத்து புரிதலுடன் வாழ்தல் அவசியமாகும். நிறையோ குறையோ திருமணத்திற்குப் பின் மறைக்க முடியாது. கவர்ச்சியையும் தாண்டி கணவன், மனைவி, குடும்பம் என்கிற பொறுப்புணர்வு அவர்களுக்கு வந்துவிடுகிறது. தங்களின் பொறுப்புணர்ந்து விட்டுக் கொடுத்து அன்பை வெளிப்படுத்தி வாழ்பவர்களிடம் காதல் இன்னும் மிளிரத் தொடங்குகிறது.

ரேவதியும் ரவியும் பிடிவாதமாக இருந்து திருமண பந்தத்திற்குள் நுழைந்தவர்கள். விடடுக் கொடுத்தல் என்பது ரேவதியிடம் மட்டுமே இருக்கிறது. ரவி தன்னைத் திருத்திக் கொள்ளாமல் பொறுப்புணர்ச்சி இல்லாமல் நடந்து கொண்டது ரேவதிக்கு மனக்கசப்பை ஏற்படுத்துகிறது. தாயிடம் புலம்பினாலும் ரவியை விட்டு அவள் விலகி வரவில்லை. அவன்மீது கொண்ட காதல் எத்தனை பிரச்சனைகள் வந்தாலும் அவளைக் கட்டிப் போட்டு வைத்திருந்தது.

## இரட்டை முரண்கள்

பரிணாம வளர்ச்சியில் மனிதன் விலங்கின் வழித்தோன்றலாக வந்திருக்கிறான் என்பதை நாம் அறிவோம். காட்டுமிராண்டியாக வாழ்ந்த காலத்தில் அவனிடமிருந்த விலங்குணர்ச்சியே (Id) இட் என்று சொல்லப்படுகிறது. தன்னை அறியாமல் மனிதன் ஆவேசப்படுதல் ஆகும். எப்படியாவது வாழ வேண்டும் என்ற உணர்ச்சியும் கண்மூடித்தனமான வெறிகளும் அவனிடம் இருந்திருக்கும். மனிதனிடம் இருக்கும் இந்த விலங்குணர்ச்சி உயர்வழிப்படுத்தப் படும்போது அவன் அபூர்வமான காரியங்களைச் செய்கிறான். கோபம் ஏற்பட்டதும் மற்றவனைக் கொல்லத் துடிப்பது விலங்குணர்ச்சி. அவனைப் புரிந்து கொண்டு மன்னித்து விடும்படி புது வழியைக் காட்டி மனதைத் திருப்பி விடுவது பண்பாட்டுணர்ச்சி (ego). மனதைத் திசைமாற்றிட உயர்வழிப்படுத்துதல் (Sublimation) என்கிற வேலையை பண்பாட்டுணர்ச்சி செய்கிறது. ஆதிகாலத்தில் மனிதரிடம் இருந்த விலங்குணர்ச்சி போய் பண்பாட்டுணர்ச்சி மேலோங்கிய நிலையில் இன்று அமைதியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மனம் தர்க்கரீதியாக விவாதித்துக் கொண்டு நம்மைக் கட்டுப்படுத்தும் செயலை பகுத்தறிவு மனம் (ego) செய்கிறது. மனிதனின் பகுத்தறிவு மனமாகிய பண்பாட்டுணர்ச்சி தன் வேலையைச் செய்யத் தவறும்போது அஃதாவது விலங்குணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் விட்டு விடும்போது தவறு செய்ய நேரிடுகிறது. அவ்விடத்தில் மனச்சாட்சி பண்பாட்டு உணர்ச்சியை கண்டிக்கவும் தண்டிக்கவும் செய்கிறது. எப்போதும் பண்பாட்டுணர்ச்சி ஓய்வெடுத்துக் கொள்ளாமல் விலங்குணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டே இருக்கிறது (Lier & Vincent, 2012; Mani, 2014).

பண்பாட்டு உணர்ச்சி இரு பக்கமும் போராட வேண்டிய நிலை ஏற்படுகிறது. விலங்குணர்ச்சியை கட்டுப்படுத்த முடியாமல் போகும் போது, மனசாட்சி சொல்லும் கோரிக்கைகளை எதிர்த்து நின்று காத்துக் கொள்ள முடியாமலும் போகிறது. இந்த நிலையில்தான் மனிதன் பெருந்துன்பங்களுக்கு ஆளாகிவிடுகிறான். பகுத்தறிவு மனதின் பலவீனத்தைக் கண்டு மனசாட்சி துன்புறுத்துவதால்,

சாட்டையால் அடித்து விரட்டுவதால் மன நோய்கள் உண்டாகின்றன. விலங்குணர்ச்சி (Id), பண்பாடுணர்ச்சி (ego) இரண்டும் சமமாக இருக்கும்போது வாழ்க்கை மேடு பள்ளமற்ற சீரான பாதையில் பயணிக்கிறது.

தான் விரும்பிய ஒரு பொருளை அடைவதற்கு போராடுவதும் அடைந்தே தீர வேண்டும் என்று விடாப்பிடியாக இருப்பதும் இப்புதினத்தில் ரேவதி, ரவி இருவரிடையிலும் காணப்படுகிறது. தாயும் தந்தையும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ரேவதி மனம் மாறவில்லை. மாறாக அவளிடத்தில் பிடிவாதம் கூடிக்கொண்டே போனது.

“போட்ட கணக்கு தப்புன்னு தெரிஞ்சும், நான் போட்டன் அதனால சரின்னு நீ சொல்வியா? மனசு ஆசைப்படுதுங்கறதுக்காக தப்பான கணக்கு எப்படி சரியான கணக்கா இருக்க முடியும். தெனம் நூறு புள்ளைங்களுக்குப் பாடம் சொல்லித் தர்றவன் நானு. ஒனக்கும் சொல்லிக் கொடுத்திருக்கன். இப்ப நான் சொல்றது கூட்டல் கழித்தல் கணக்கில்ல. மத்தவங்க மதிக்கும்படி எப்படி கௌரவமா இருக்கிறதுங்கிறதப் பத்தி, எப்பிடி உசுரோட இருக்கணும்ங்கிறதப் பத்தி, புரியுதா? நல்ல ஸ்கூல்ல படிச்சிருக்க. நல்ல காலேஜில படிச்சிருக்க. ஒனக்கு எல்லாம் புரியும். போ, போயி குளி, துணிய மாத்து, சாப்புடு, வேலக்கிப் போறத பத்தி யோசி” (Imayam, 2018). குளிக்காமல், துணி மாற்றிக் கொள்ளாமல், சாப்பிடாமல் அறைக்குள்ளேயே அமர்ந்து போராட்டம் செய்யும் ரேவதிக்கு நடேசனின் அறிவுரை எடுபடவில்லை. அவள் மனம் நினைத்த ரவியை அடைவதில் மட்டுமே நிலைத்து நின்றது.

தான் நினைத்ததை அடைய வேண்டும் என்பதில் தீவிரம் காட்டுவதும் ஒரு வகையில் மனநோய்தான். தாக்குதல் உணர்ச்சி (Aggression) இரண்டு வகையில் வெளிப்படும். 1. பிறரைத் தாக்கும் மனோபாவம், 2. தன்னைத் தானே தாக்கிக் கொள்ளும் மனோபாவம். ரேவதி தன்னைத் தானே தாக்கிக் கொள்ளும் நிலையில் உடை, தோற்றம் முதலியவற்றில் அலட்சியம் செய்தல். நடை, உடை, பாவனைகளில் அக்கறையின்மை, வேலைக்குச் சென்றால் ரவியைக் கட்ட முடியாது என்பதற்காக வேலைக்கான ஆர்டரை கிழிதது்ப் போடுதல் இதுபோன்ற செய்கைகளால் தன்னைத் தானே கண்டித்துக் கொள்கிறாள். தோழி அருண்மொழி வந்து எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் மனம் மாறவில்லை. “ஆளு சிகப்பா, வாட்டமா இருக்கான்ங்கிற ஒரே காரணத்துக்காக ஒருத்தனக் காதலிக்க முடியுமா, கல்யாணம் கட்டிக்க முடியுமா?” (Imayam, 2018). அருண்மொழியின் எந்த கேள்விக்கும் ரேவதி பதில் சொல்லவில்லை. “நீங்க சொல்றதெல்லாம் மனசுல நிக்கல.அவன் சொன்னது மட்டும்தான் நிக்குது” என்கிறாள் (Imayam, 2018). “ஒன்னப் பாத்ததும் திருவிழா கூட்டத்தில் கைப்புள்ள தொலஞ்சி போறமாதிரி என் மனசு தொலைஞ்சி போச்சின்னு சொன்னானில்ல அதுதான்” என்று ரேவதி, ரவி தன்னிடம் சொன்ன வார்த்தையைச் சொல்கிறாள். அவனிடம் அதிகம் பேசியதில்லை. ஆனாலும் அவனை அவளால் மறக்க இயலவில்லை. அடைந்தே தீர வேண்டும் என்கிற எண்ணம் உள்ளுக்குள் இருந்தது.

மகளின் பிடிவாதம் வருத்தத்தைத் தந்ததால் ரவியின் வீட்டிற்குச் சென்று சண்டையிட்டாள் ரேவதியின் அம்மா. “ராவும் பகலும் ஓயாம தொந்தரவு செஞ்சா ஒரு பொண்ணு என்னதான் செய்வா? பொட்டச்சி மனசு எரக்கப்பட்ட மனசுதான. ஒடம்பு பூராவும் எம் பொண்ணு பேரப் பச்ச குத்திக்கிட்டு எதுக்கு எங்க வீட்டு வாசல்ல நிக்கிறான்? பிளேடால கையில கிழிச்சிக்கிட்டு நிக்குறான்” என்று ரவியின் அம்மாவிடம் அமராவதி சண்டையிட்டாள். தன்னை விட இரண்டு வயது மூத்த சகோதரி திருமணமாகாமல் இருப்பதைப் பற்றிக் கூட ரவி கவலைப்படவில்லை.

ரேவதியின் பெற்றோர் அவளின் பகுத்தறிவு (ego) மனத்தை பழுதுபார்க்க போதனைகளை வழங்குகிறார்கள். புத்தி தடுமாற்றத்தினால் மகள் செய்யும் காரியத்தை கைவிடப் போராடுகிறார்கள். திருமணம் செய்து கொண்ட பிறகு ரவியின் தாய் கோகிலா ரவியின் விலங்குணர்ச்சி எண்ணங்களை வளர்த்தெடுக்கிறாள்.

“எங்கம்மா சொல்லிச்சு ஆளு அழகா இருக்கா. வேலக்கி அனுப்பாதன்னு ஆட்டோ ஸ்டேண்டுல, புதுக்குழப்பம், புதுப்பிரச்சனை வந்துடும்னு சொன்னாங்க” என்கிறான் (Imayam, 2018). தாய் பேச்சைக் கேட்பவன் கிடையாது ரவி. ஆனாலும் மனைவி பற்றி சொன்னதை கேட்டுக் கொள்கிறான். தான் மட்டுமே இரசிக்கப் பிறந்தவள என்ற எண்ணத்திற்குத் தாயின் வார்த்தைகள்

தூபமிட்டன. ரவி சொல்வது உண்மையில்லை என்று புறந்தள்ள முடியாது. இதை ரவியின் தாய் ஓரிடத்தில் சொல்கிறாள்.

“நான் அப்பவே சொன்னன், கேட்டியா? படிச்சியிருக்கா, ஆளு வாட்டமா இருக்கா, அவ அப்பன் வேலையில இருக்கான். சொந்தமா மெத்த வீடு இருக்கு. காசு உள்ள எடம். நம்மளுக்கு ஒத்துவர மாட்டானு எம்மாம் சொன்னன். ஒண்ணத்தயும் நீ கேக்கல. பொட்டச்சி மொக வாட்டம் ஒண்ணு நல்லா இருந்தா போதாதா? திமிரு கொண்டு அலையுறதுக்கு. யாரையும் மதிக்காம திரியுறதுக்கு” (Imayam, 2018). மருத்துவமனைக்கு வந்த தாய் ரவியிடம் பேசுகிறாள். மூர்க்கச் சிந்தனையுள்ள ஒருவனிடம் கொம்பு சீவி விடுவதைப் போல் இதற்கு முன் பேசியிருக்கிறாள் என்பது தெரிகிறது.

மனைவியை அடித்து உதைக்கும் சமயத்தில் தாய் மகனைக் கண்டித்திருந்தால் இவ்வளவு முரடனாய் இருந்திருக்க மாட்டான். “வாசல்ல நின்னாப் போச்சு. தெருவுலா நின்னாப் போச்சி. ஒரு கடக்கிப் போனா போச்சு. அப்பிடி அடிச்சி நொறுக்குவான். இருபத்தி நாலு மணி நேரமும் சந்தேகம் தான்” (Imayam, 2018).

எதிர்த்துப் பேசாத ஒரு பெண்ணை ரவி படுத்திய பாடு அதிகம்தான். ரவியின் மனம் திரிபுணர்வை (Delusion) அடைவதற்குத் தாயின் சொற்களும் காரணமாகின்றன. இல்லாத ஒன்றைத் தன் விருப்பத்தால் உள்ளதாக நினைத்துக் கொள்ளுதல் திரிபுணர்வு ஆகும். யாராலும் கவனிக்கப்படாத நிலையில் இருந்தாலும் உலகம் தன்னை அக்கறையோடு கவனித்துக் கொண்டிருப்பதாக எண்ணுதல் ஏற்கெனவே இந்த உணர்வு இருக்கும் ஒருவனிடம் மேலும் அதற்கு வலுவூட்டி வழிமாற்றி விடப்படும் செயலை அவன் தாய் கோகிலா (Distortion) செய்கிறாள்.

தன் மகள் மணமாகாமல் இருக்கும் கவலையில் ரேவதியை அவள் மனம் வெறுக்கிறது. மகளைத் திட்டாமல் அந்த வெறுப்பு மருமகளின் மேல் பாய்கிறது. ரவியின் மனதில் ரேவதியைப் பற்றி எதிர்மறையான சிந்தனைகளைத் தூண்டி விடுகிறாள். மருமகள் தீயில் வெந்து கிடக்கும் நிலையிலும் அவளைக் குறை சொல்கிறாள்.

“எம் பொண்ணும்தான் செவப்பா இருக்கா. ஆளு வாட்டமா சினிமா நடிக மாதிரி தளதளன்னு இருக்கா. ஒரு கொறையுமில்ல. அப்பிடியும் கட்டிக்கிறன்னு ஒரு நாயும் வல்ல. காதலிக்கிறன்னு சொல்லிக்கூட என் வீட்டு வாசப்படியில ஒரு நாய் வந்து நிக்கல. வயது முத்திப் போயி நிக்குறா. வயசுல கட்டிக் கொடுத்திருந்தா அவளும் ரெண்டு மூணு புள்ளைக்கித் தாயாயிருப்பா. எம் பொண்ணு ஒண்ணுமில்லாம நிக்குது” என்று முதிர்கன்னியாய் இருக்கும் மகளை நினைக்கிறாள். அதே நேரத்தில் ரேவதியின் தாய் மகளுக்காக கண்ணீர் வடிக்கிறாள். “ஒரு நாலணாக் கயிறக் கட்டுனதுக்காக துடிக்கத் துடிக்க எரிச்சிட்டானே” என்று வருந்துகிறாள் (Imayam, 2018). இரு தாய்களின் வருத்தமும் கவனிக்கப்பட வேண்டியதாகிறது. கழுத்தில் கயிறு ஏறியதானல் ஒரு பெண்ணுக்குக் கஷ்டம். கயிறு கழுத்தில் ஏறாததால் இன்னொரு பெண்ணுக்கு வருத்தம், வாழ்க்கை ஒரு விசித்திரமானது என்பதை இவர்களின் புலம்பல் வெளிப்படுத்துகிறது.

## தற்கொலை நிகழ்வும் உளச்செயல்பாடும்

விரும்பும் ஒரு பொருளை அடைய எண்ணும்போது நிறைவேற்றிக் கொள்வதற்கு தடையாக இருப்போரை மிரட்டிப் பணிய வைப்பதற்கு தற்கொலைச் சம்பத்தைக் கையிலெடுத்து பணிய வைப்பதுண்டு. எதேச்சையாய் மிரட்டும் நோக்கில் செய்யும் ஒரு செயல் விபரீதமாய் முடிவதும் உண்டு. வாழ்க்கையை நிலையை சமாளிக்க முடியாது என்ற உணர்வுகளின் விளைவாக ஏற்படும் மனநலக் கோளாறுகளால் சிலர் தன்னை அழிதது்க் கொள்வதுண்டு. அன்பு முறிவு ஏற்படுவதைத் தாங்க முடியாமல் செய்து கொள்வதும் உண்டு. எப்படியிருப்பினும் அந்நபரின் மனச்சோர்வு (depression) தான் தற்கொலைக்குக் காரணமாக அமைகின்றது.

இப்புதினத்தில் ரேவதி தீக்குளித்து ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறாள். சிகிச்சை பலனின்றி அவள் இறந்து விடுகிறாள். நான்கு வயதிலும் ஐந்து வயதிலும் உள்ள இரண்டு

குழந்தைகளை விட்டு விட்டு அவள் இந்த முடிவை எடுக்கக் காரணம் என்ன? அவளே தீ வைத்துக் கொண்டாளா? விபத்தா? ரவி தீ வைத்தானா? இப்படியான கேள்விகளுக்கிடையிலான மன உணர்வுகள் தான் உரையாடல்களாக புதினம் முழுவதும் பயணிக்கின்றன.

மனச்சோர்வு என்பது தனிநபரையும் குடும்பத்தையும் பாதிக்கும் கடுமையான நோய் எனலாம். எல்லோர்க்கும் ஏற்படக்கூடிய ஒன்று என்றாலும் அது தொடர்ந்து நீடிப்பின் நோயாக மாற்றம் பெற்று விடும். பின்னர் தற்கொலைக்கு இட்டுச் சென்று விடும். வாழ்க்கையில் எதிர்த்துப் போராட முடியாமல் வலுவிழந்த நிலையில் மனம் வாழ்க்கையை முடித்துக் கொள்ள எண்ணுகிறது.

இப்புதினத்தில் ரேவதி தான் விரும்பிய ரவியைக் கரம்பிடிக்கத் தற்கொலை முயற்சிகளை எடுத்திருக்கிறாள்.

"ஒரு வரன் சொன்னாங்க அத என்னான்னு விசாரிச்சிட்டு வர்றன்" என்று சொல்லிட்டு நடேசன் சென்றதும் ரேவதி வேகமாக எழுந்து போனது அவராவதிக்கு பயத்தை உண்டாக்கியது. கீரை உருவிக்கொண்டிருந்ததை அப்படியே போட்டு விட்டுச் சமையலறைக்கு ஓடினாள் அமராவதி. அப்போது தீப்பெட்டியை கையில் வைத்துக் கொண்டு கேஸைத் திறந்து விடுவதற்கு ரேவதி தயாராக இருந்தாள். அதைப் பார்த்ததும் போன வேகத்தில், தீப்பெட்டியைப் பிடுங்கி சன்னல் வழியாக வெளியே விட்டெறிந்தாள்" (Imayam, 2018). பெற்ற மனம் பதறி அழுவதையும் கண்டு கொள்ளாமல் ரேவதி அழுத்தமாக நின்றாள்.

ஏற்கனவே மனச்சோர்வுக்கு ஆளாகித் தற்கொலை முயற்சி செய்தவர் மீண்டும் அதைச் செய்யக் கூடும். அதற்கேற்றாற்போல் ரேவதி தன்னைத்தானே வருத்திக் கொண்டு அறையை விட்டு வெளியில் வராமல் பல் துளக்காமல் உண்ணாமல் நோன்பு இருந்தாள். மகள் உயிருடன் இருந்தால் போதும் என்று அவனுக்கே கட்டி வைத்தனர். தங்களின் குடும்பத்திற்கு எந்த வகையிலும் ஒதது வராதவனுக்குப் பெண்ணைக் கொடுத்து பெற்றோர்களுக்கு கௌரவக் குறைச்சலாக இருந்தது. குடும்ப கௌரவத்தை மகள் சிதைத்து விட்டாள் என்ற எண்ணத்தில் ஆறு ஆண்டுகள் நடேசன் மனதளவில் தள்ளியே வைத்திருந்தார். தாயைப் பார்க்க மகள் வருவதும் மனைவி அவளுக்குப் பண உதவி செய்வதையும் அவர் தடுக்கவில்லை. மகள் தீக்குளித்து விட்டாள் என்ற செய்தியைக் கேட்டதும் அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இந்தச் செயல் விபத்தா? கொலையா? தற்கொலைச் சம்பவமா? என்ற கேள்விகள் அவரவர் மனதில் தோன்றுகின்றன. எதுவாக இருந்தாலும் அவனின் நடத்தையும் செயல்பாடுகளும் திருமணத்திற்குப் பிறகு மாறவேயில்லை. குடித்து விட்டு வந்து ரேவதியை அடிப்பதும் உதைப்பதுமாகவே இருந்திருக்கிறான் என்பதை ரேவதியின் தாய் புலம்பலில் இருந்தே அறிந்து கொள்ள முடிகிறது.

பெண் சாகக்கிடக்கிறாள் என்பதை அறிந்ததிலிருந்து மன நடுக்கத்துடன் பிள்ளை பிழைத்தாக வேண்டும் என்று 10 லட்சம் பணத்தை எடுத்து மருத்துவரின் மேசை மீது வைக்கிறார் ரேவதியின் தந்தை நடேசன், மருத்துவரோ 'ஒரு கட்டத்துக்கு மேல் பணத்துக்கு அர்த்தம் இருக்காது' என்கிறார்.

எல்லார் மனதிலும் இடறிக் கொண்டிருந்த கேள்விக்கு சம்பவம் எப்படி நடந்தது என்பதை இறுதியில் சொல்லியிருக்கிறார் ஆசிரியர். புதினத்தின் ஆரம்பத்தில் தீக்குளித்தல் சம்பவம் நடக்கிறது. அதற்கான சூழல் இறுதியில் ரேவதி இறப்பதற்கு முந்தைய நாள் காட்டப்பட்டுள்ளது. வாசிப்பாளருக்கு இந்த ஒரு கேள்விக்கு விடை தேடியே பக்கத்தை புரட்ட வேண்டிய நிலை இருக்கிறது. ஆசிரியர் ஏன் இப்படி நிகழ்வை அமைத்தார். ஏன் உடனடியாக அவளின் பெற்றோர்கள் ரவியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை என்பதை ஆராய்ந்தோமானால் அதற்கான தெளிவை நாம் பெறுவதற்கு நிகழ்வு இடமளிக்கிறது.

ரவியின்பால் ரேவதியின் நடந்து கொண்டதில்லை. மருத்துவமனையில் இருந்த நாட்களிலும் குடிபோதையிலேயே இருக்கிறான். அவனின் பேச்சு செயல் எதுவும் மனைவியின் இந்நிலைக்கு இரங்கி வருத்தப்பட்டதாக வெளிப்படவில்லை. சம்பவம் நடந்த அன்று உடன் இருந்தவன் ரவி மட்டுமே. அவனை நெருங்கி பேசும் மனநிலை யாருக்கும் இல்லை. ரேவதியின்

தோழியும் அண்ணன் மனைவியுமான அருண்மொழி ரவியை நெருங்கிச் சம்பவம் எப்படி நடந்தது என்று கேட்கிறாள்.

“தானே யாராவது கொளுத்திக்குவாங்குளா? என்று அருண்மொழி கேட்கிறாள். சத்தியமா நான் செய்யலை என்கிறான். மண்ணெய ஊத்தியிருந்தா இவ்வளவு வெந்திருக்காது. ஆட்டோவுக்கு ஊத்துற டீசல ஊத்திக்கிட்டா.”

“அப்ப நீ எங்க இருந்த”

“ஊட்டுலதான் டி.வி. பாத்துக்கிட்டிருந்தன்.”

“என்னா சண்ட நடந்துச்சி.”

“சண்டையெல்லாம் அன்னிக்கு நடக்கல. நாளு நாளக்கி முன்னால அவங்கமோ ஆட்டோவுக்கு டியூ கட்ட நாப்பதாயிரம் கொடுத்தாங்க. அதுல ஐநூறு எடுத்துக்கிட்டுப் போயி ரெண்டு மணிக்கு சரக்கு சாப்புட்டுட்டு வந்துட்டன்.”

“எங்கம்மா டியூ கட்டத்தான் பணம் கொடுத்தாங்க. முப்பதாம் தேதி நான் டியூ கட்டணுமில்ல. அதுலயிருந்து எடுத்துக்கிட்டுப் போயி எதுக்குக் குடிச்ச? நீ இதே மாதிரி செஞ்சிக்கிட்டேயிருந்த நான் செத்திடுவன்னு சொன்னா. நான் வெளயாட்டுக்கு ‘சரி செத்துப் போன்னு’ சொல்லிட்டன். கொஞ்ச நேரம் கூட இருக்காது. எல்லாம் முடிஞ்சி போச்சி” என்று சொன்ன ரவி குலுங்கிக் குலுங்கி அழுதான் (Imayam, 2018).

ரேவதிக்கு தொடர் மனச்சோர்வு இருந்தாலும் அவள் தற்கொலை செய்து கொள்ளும் மனநிலையில் இருந்ததில்லை. தாயிடம் வந்து பணம் வாங்கிக் கொண்டு போகும் போது கூட சாகெல்லாம் மாட்டேன் என்று சொன்னவள் உடனடியாக தன்னை மாய்த்துக் கொள்ளும் காரியத்தை செய்ததற்கு ரவியின் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் காரணமாகின்றன. ‘செத்துப் போ’ என்று சொன்ன வார்த்தையால் ரேவதிக்கு ஏற்பட்ட மனமுறிவே தற்கொலைக்குத் தூண்டியிருக்கிறது. தான் பெற்ற குழந்தைகள் பெற்றோர்கள் யாரையும் பற்றி அந்நேரம் அவள் நினைக்கவில்லை. நினைத்திருந்தால் மனம் மடைமாற்றம் கண்டிருக்கக் கூடும்.

“வேலக்கி சேர ஆர்டர் வந்துச்சி. ஓடிப்போயிட்டா என்னாப் பண்றதுன்னு வேலைக்கிப் போவ வேணான்னுமின்னுட்டம். ஒரு மாப்ளயப் பாத்து தேதி வைக்கிலாமின்னு சொன்னப்ப மண்ணென்ணெய ஊத்திக்கிட்டா. சரின்னு அந்தக் கல்யாணத்த நிறுத்திட்டம். மூணு மாசம் கழிச்சி அடுத்த மாப்ளயப் பாத்து முடிவு செஞ்சம். தூக்குல தொங்கப் போயிட்டா. அப்புறம் ஒரு டாக்டர் மாப்ளப் பாத்துப் பேசி முடிச்சம். அடுப்புல இருந்த கேசத் தொறந்து வுட்டுக்கிட்டு தீக்குச்சிய கையில வச்சிக்கிட்டு கொளுத்திக்கப் போனா. அதற்குப் பின்னாலதான் ஆளு உசுரோட இருந்தாப் போதுமின்னு அந்தப் பொறுக்கிப் பயலுக்கே கட்டி வச்சம்” என்று ரேவதியின் தாய் மருத்துவமனையில் மலர் என்ற பெண்ணிடம் கூறி அழுகிறாள் (Imayam, 2018).

ரேவதி செய்யும் தற்கொலை முயற்சிகளிலெல்லாம் காப்பாற்றப்பட்டு விடுகிறாள். தாய் வீட்டிலிருந்து அவளின் செய்கைகளைக் கண்காணித்துக் கொண்டே இருக்கிறாள். அவள் எடுத்த முடிவுகளைத் தாய் தட்டிவிடுகிறாள். கணவன் வீட்டில் ரேவதியின் தற்கொலை நிகழ்வைக் கண்காணிக்கவில்லை. அவள் இப்படிச் செய்வாள் என்பதை அறியாமல் டி.வி. பார்த்துக் கொண்டிருக்கிறான். அவள் தன்னை அழித்துக் கொள்ள எடுத்துக் கொண்ட பொருள் மண்ணெண்ணை அல்ல டீசல். ரவியின் வார்த்தை அதிர்ச்சியை ஏற்படுத்தி மனதளவில் இழப்பை ஏற்படுத்தி விட்டது. அந்நேரத்தில் சிந்திக்கும் ஆற்றல் இழக்கப்படுகிறது. இந்நிலையில் அடர்த்தி அதிகம் உள்ள டீசல் அவள் உடல் முழுவதையும் 89% வெந்து தணிக்கிறது. மனதளவிலான இழப்பே மனமுறிவாகிறது. இச்சமயத்தில் ஏதேனும் குறுக்கீடுகள் ஏற்பட்டால் இந்தத் தற்கொலை நிகழ்வு தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும்.

## தற்காப்புச் செயல் நுட்பம் (Defence Mechanism)

மனிதன் ஒவ்வொரு உணர்ச்சியையும் மாற்றுருக் கொள்ளச் செய்வான். காதலிக்க அஞ்சுபவன் காதலிக்கத் தக்கவர் யாரும் இல்லை என்று சொல்லுவான். உறவுகளுக்கு உதவ வேண்டி வரும் என்பதை அறிந்தவன் உறவுகளே மோசம் என்பான். வெற்றி கிடைக்காவிட்டால் வெற்றியால் எந்தப் பயனும் இல்லை என்று பேசுவான். இவையெல்லாம் மனிதனின் தற்காப்புச் செயல் நுட்பத்தால் ஏற்படுகின்ற வார்த்தைகள். "தன்னால் செய்ய முடியாத காரியங்களைப் பற்றி மனம் நினைக்கும் பொழுது தன்னை அறியாமல் அந்த எண்ணங்களை உள்ளடக்கி விடுகிறோம். இவ்வாறு உள்ளடக்கப்பட்ட எண்ணம் மனதின் தற்காப்புக்குட்பட்டு மாற்றுருவில் விளங்கும்" (Chandramohan, 2009). தன்னை அறியாமல் எழும் ஆசைகள், பிறரை அடக்கி ஆளும் எண்ணம், சமுதாயத்திற்கு விரோதமாக நடக்கத் தூண்டும் இச்சை என்று பலவிதமாக இந்த உணர்வு வெளிப்படும். தான் இளம்பருவத்தில் கொண்ட காதல் விளையாட்டுக்கள், காதல் தோல்வி இவையெல்லாம் மனைவியின் நடத்தையில் சந்தேகத்தையும் அடக்கி வைக்கவும் செய்யத் தோன்றும். இருபாலினத்தவரிடமும் தற்காப்பு நடவடிக்கைகள் இருக்கும்.

இப்புதினத்தில் 'ரவி' தற்காப்பு நடவடிக்கையால் பேசும் உரையாடல் அதிகம் இடம்பெறுகின்றன. ஒரு தவறு நடந்தபிறகு தவறுக்குத் தான்தான் முழுக்கக் காரணம் என்பதை அறிந்தும் அதை அவன் ஒத்துக் கொள்ளவே இல்லை. மாறாக ரேவதியின் குடும்பத்தாரே அவளின் மரணப் படுக்கைக்குக் காரணம் என்கிறான்.

"வேலக்கிப் போவணும்கிற வார்த்தயச் சொன்னாப் போதும், அவனுக்கு அப்படியொரு கோவம் வரும். நான் வேலக்கிப் போயிட்டா அவன வுட்டுடுவன்னு நெனச்சிட்டான். ஒரு பொம்பள அழகா இருக்குறது எவ்வளவு கஷ்டமானது தெரியுமா". ரேவதி மரணப்படுக்கையில் தாயிடம் கூறிக் கண்ணீர் வடிக்கிறாள். தன்னை விட்டு விட்டுப் போய்விடுவாளோ என்கிற பயம். இல்லாத ஒரு விசயத்தை நடக்காத ஒன்றை மனதில் கற்பித்துக் கொண்டு ரேவதியை அடக்கி ஆள்கிறான்.

"போலீசுகிட்ட என்ன சொல்லித் தொலக்கிறாளோ, நாரச் சிறுக்கி" என்று ரேவதியைக் கடிந்து கொள்கிறான். ரேவதி விபத்து என்று வாக்குமூலம் கொடுத்தது தெரிந்த பிறகுதான் ரேவதியைத் திட்டாமல் இருந்தான்.

"நான் தெனம் அவ ஒடம்புலதான் அடிச்சேன். நீங்க மனசுல அடிச்சிங்க. நான் தான் சண்ட போடுறன், நான் தான் ஸ்டேஷனுக்குப் போறன். ஒங்களுக்கு அதுல என்ன?" எந்தச் சூழ்நிலையிலும் பழிபாவத்துக்கு அஞ்சாதவனாக பிறரைக் குற்றம் சொல்பவனாகவே இருக்கிறான் (Imayam, 2018). 'நீங்க ஒதுங்கி போவப் போவ எனக்குக் கோவம் அதிகமாச்சி' என்று அருண்மொழியிடம் கூறுகிறான்.

தன் மனைவி இந்த நிலையில் கிடப்பது தான் செய்த காரியத்தால்தான் என்பதை ரவி உணரவில்லை. தன்னுடைய தவறை சரிக்கட்ட மனம் பிறர்மேல் குற்றத்தைச் சொல்லித் தன்னைத் தற்காத்துக் கொள்கிறது..அவனுடைய பகுத்தறிவு மனம் வேலைசெய்யவில்லை. ரேவதி வீட்டாரின்மேல் உள்ள வெறுப்பை வைத்துக்கொண்டு அவளின் தற்கொலை நிகழ்வுக்குக் காரணம் அவர்கள்தான் என்று சொல்கிறான். தன்னைத் தற்காத்துக் கொள்ளும் மனநிலையில் மட்டுமே இருந்து கொண்டு பேசுகிறான்.

## முடிவுரை

ஒரு பெண்ணுக்கு மண வாழ்க்கை நல்லபடியாக அமைந்து விட்டால் பெற்றோருக்கு அது பெரும் நிம்மதியை அளிக்கிறது. கடமையைச் சரிவரச் செய்துவிட்ட நிறைவு அவர்களுக்கு ஏற்படுகிறது. பெற்றோர்கள் ஏற்படுத்தித் தரும் திருமண பந்தத்தில் இடர்ப்பாடே இல்லை என்று சொல்ல முடியாது. பிரச்சனைகள் வந்தாலும் அதைக் களைந்து, இன்னல்களில் பிள்ளைகளின் வாழ்க்கைக்கு உறுதுணையாக இருப்பதைத் தங்களின் கடமையாக எடுத்துக் கொள்கின்றனர். அதே நேரத்தில் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட பிள்ளைகளின் வாழ்க்கையில் பிரச்சனைகள் ஏற்படும்போது

பெற்றோர்களின் ஆதரவு கிடைப்பதில்லை. தகுந்த ஆலோசனை வழங்கி நெறிப்படுத்த ஆள் இல்லாமல் தங்களைத் தட்டிக் கேட்கும் பெரியவர்கள் தலையீடு இல்லாமல் பிரிந்து செல்வதும் தற்கொலை செய்து கொள்ளவும் செய்கின்றனர். இச்செயல்பாடுகள் காதல் மீது வெறுப்புத்தன்மையை ஏற்படுத்தி விடுகிறது.

## References


Chandramohan, (2009) Freud, Prema Presuram, Chennai, India

Imayam, (2018) Sellatha Panam, Kriya Pathippagam, Chennai, India

Lier, J., Vincent, S. (2012) Freud, Ethir Veliyeedu, Pollachi, India

Mani, C. (2014) Freud, Adayaalam Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License